# வைரஸ் விரட்டு



வைரஸ்கள் நம்மைத்தேடி வருவதைவிட அவைகளை நாமாய்த்தேடிப் போய் வலிய இழுத்துவருவது தான் இன்றைய டிரண்ட். இரண்டு வாரத்துக்கொருமுறை தனது லேப்டாப்பை ஃபார்மேட் செய்ய கோபால் கொண்டுவருகின்றான். எல்லாம் வைரஸ் தொல்லை தான். அது என்ன வைரஸ் என கண்டுபிடித்து அதை நீக்கும் வழி கண்டுபிடித்து அதை நீக்கினாலும் ஏனோ மனது கேட்பதில்லை. ஏர்லைன்சில் பயணச்சீட்டு முன்பதிவு செய்வதிலிருந்து ஈபேயில் நோக்கியா 6300க்கு Plantronics புளூடுத் ஹெட்செட் வாங்குவதுவரை எல்லாமே இந்த மடிக்கணிணி வழிதான். ஒரு முறை அட்டாக் ஆன கணிணியை முழுசாய் நம்பக்கூடாது என்பர் கணிணித்துறை பாதுகாப்பு வல்லுனர்கள். போகும் போது அது என்னவெல்லாம் விட்டுவிட்டுப் போனதோ என்ற சந்தேகம் தான். யாருக்குத் தெரியும்?

இணையம் வழி வரும் கணிணி வைரஸ்களிலிருந்து விலகியிருக்க நான் பின்பற்றும் சில வழிமுறைகளை இங்கே கொடுக்கின்றேன். எனக்கு இவை வொர்க் அவுட் ஆகின்றன. ஒருவேளை உங்களுக்கும் வொர்க் அவுட் ஆகலாம்.

1.விண்டோஸ் ஃபயர்வால் எப்போதும் "ON" அல்லது "Enable" நிலையிலேயே இருக்கட்டும்.இது ரொம்பவும் முக்கியம். இது தான் உங்கள் கணிணிக்குள் வேண்டா விருந்தினர்களை உள்ளே விடாமல் தடுத்துக கொண்டிருப்பது.

2.ஒவ்வொரு இரண்டாவது செவ்வாய்கிழமையும் மைக்ரோ சாப்ட் வெளியிடும் "தட்டல் ஒட்டல்"களை நாமும் உடனடியாக நிறுவிக்கொள்ளவேண்டும். I mean Windows updates. http://www.update.microsoft.com

3.மைக்ரோசாப்டின் இலவச வெளியீடான Windows Defender–ஐ இறக்கம் செய்து நிறுவிக்கொள்ளலாம்.

4.கூகிள் வழங்கும் இலவச மென்பொதியான "Google Pack"–க்கோடு Norton Security Scan–ம் Spyware Doctor–ம் இலவசமாய் கிடைக்கின்றது. விட்டுவைப்பது ஏன். அதையும் தெரிவுசெய்து நிறுவி வைத்துக் கொள்ளுங்கள். http://pack.google.com

5.சில 4shared.com போன்ற கோப்புவழங்கிகள் அவைகளில் ஏற்றம்/இறக்கம் செய்யப்படும் கோப்புகளை வைரஸ் ஸ்கேன் செய்வதுண்டு. ஆனால் Rapidshare போன்ற பிரபல பல கோப்புவழங்கிகள் இவ்வாறு வைரஸ் ஸ்கேன் செய்வதில்லை. இதனால் இவற்றிலிருந்து இறக்கம் செய்யப்படும் கோப்புகள் உங்கள் கணிணிக்கு அபாயம் தரலாம்.

6.ஆடியோ வீடியோ போன்ற கோப்புகளை தைரியமாக இறக்கம் செய்து கொள்ளலாம்.ஆனால் exe கொண்ட பயன்பாட்டு கோப்புகளை இறக்கம் செய்து அப்படியே நம் கணிணியில் ஓடவிடுவது அவ்வளவு நல்லதல்ல. எல்லா பயன்பாட்டு மென்பொருள்களையும் நம்பத்தகுந்த தளங்களிலிருந்தே இறக்கம் செய்குதல் தகும்.

7.பெரும்பாலான கிராக் செய்யப்பட்ட மென்பொருள்கள் கூடவே இலவசமாக ஒரு வைரசோடுத்தான் வருகின்றன வாம்.

8.சில தளங்கள் மின்னிமின்னி ரொம்ப அக்கரையாய் காட்டும் "உங்கள் கணிணியின் பெர்பாமன்ஸ் சரியில்லை.அதை சரிசெய்யவா?" அல்லது "உங்கள் கணிணியில் வைரஸ் உள்ளது.அதை சரி செய்யவா?" என கேட்பதெல்லாம் டுப்புகள். ஒரு போதும் இது போன்ற கேள்விகளுக்கு "ஓக்கே" சொல்லக்கூடாது. "கேன்சல்" செய்து விடவேண்டும்.

9.அது போலவே முகமறியாதளங்கள் கொடுக்கும் ActiveX control களையும் இறக்கம் செய்து நிறுவிவிடாதீர்கள். ரொம்ப டேஞ்சர். அது என்னவென உங்களுக்கு தெரியாவிட்டால் எப்போதும் "Cancel"–ஐயே கிளிக்குங்கள். உண்மையிலேயே நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என தெரிந்து செய்தால் மட்டும் "OK" கிளிக்குங்கள்.

10.இது தவிர AVG, Avira, Avast போன்ற இலவச ஆண்டி வைரஸ்களில் ஏதாவது ஒன்றை இறக்கம் செய்து நிறுவிவைத்துக்கொண்டு அவற்றின் definition–களையும் அவ்வப்போது சமகாலத்திற்கு அப்டேட் செய்து கொண்டு வந்தால் பெரும்பாலான வைரஸ் தொல்லைகளை நாம் தடுக்கலாம்.

## எப்படி – வைரசால் மறைக்கப் பட்ட கோப்புகளை மீளப் பெறுதல்



வகுப்பில் உள்ள கணினியில் பென் டிரைவை உபயோகித்து விட்டு பின்னர் வீட்டிலோ வேறு கணினியிலோ இணைத்து திறந்து பார்த்தால் சில சமயம் உள்ளே ஒன்னும் இருக்காது. Shoe hidden Files இனை ஆக்டிவ் பண்ணியிருப்பினும் வேலைக்காவாது. சில malicious களின் வேலையிது. இதிலிருந்து format பண்ண முதலில் கோப்புகளை மீளப் பெற வேண்டு மல்லவா? அதற்கத்தான் இந்த வழிமுறை.

1. பென் டிரைவை இணைத்து drive letter இனை குறித்துக கொள்ளுங்கள். உதா– J:

2. Windows + R ன் மூலமோ வேறு வழியிலோ விண்டோஸ் ரன் கட்டளையை செயல்படுத்தவும். அங்கு cmd என டைப் செய்து என்டராக்கவும்.

3. command Window வந்ததும் இந்த command இனை செயல்படுத்தவும்.

attrib -s -h -r f:/*.* /s /d

இங்கு f: வருமிடத்தில் Thumbdrive ன் drive letter வரும்.

அவ்வளவே.

backup ன் பின்னர் தேவையெனில் format பண்ணலாம்

# குழந்தைகள் தோற்கடிக்கப்படுகிற சமாதானத்தின் நிழல்!



போர் தின்ற நகரத்தை
சமாதானத்தின் கடதாசி கட்டி
எழுப்புகிறது.
பூக்களும் பறவைகளும்
நிலத்திலிருந்து பிடுங்கி எறியப்பட்டிருந்த
நாளில் வெள்ளைவீதி திறந்திருக்கிறது.
எல்லோருடைய கண்களிலும் போர்
நிரம்பியிருக்க கவிழ்ந்த கைகள்
நமது நகரத்தில் உலவித்திரிகின்றன.

சூழ்ச்சிகளால் வடிவமைக்கப்பட்ட
சொற்களை மாறி மாறி
பேசிக்கொண்டிருந்த வெடிகுண்டுகள்
நிரப்பப்பட்ட காலத்தில் சீமெண்ட் சுவர்
வளர்ந்து மனதை மூடிக்கொண்டிருக்கிறது
காலங்களின் ஒளியை முழுவதுமாய்
சுறண்டி எடுத்திருக்க பொலித்தீன்
பைகளில் அலையும் கனவை
அடைத்துக் கட்டப்படுகிறது.

தோற்றுத் தோல்வியின் துயரில்
முடிந்து விடுகிறது நிலத்தின் அடங்காத
வாசனை. எல்லோரும் பேசிவிட்டுப் போன
பிறகு கதிரைகள் வெடித்துச் சிதற
ஏங்கிக்கொண்டிருந்தது சொற்கள்.

போரை கொண்டாடிக்கொண்டிருக்கிற
சமாதானத்தின் கீழ் பயங்கரம்
நிரம்பியிருந்ததைக் குழந்தைகள்
கண்டனர். எல்லோரையும்
மூடிக்கொண்டிருக்கிறது.
சமாதானத்தின் நிழல்.
குழந்தைகளின் கண்களை மெல்ல
சமாதானம் தின்கிறது.

மணல் நகரங்கள்
எழும்பிக்கொண்டிருக்கிறது.
கிராமங்கள் புதைந்துபோக முடிவற்ற
பெயர்வு நிலத்தை வரைந்து
கொண்டிருக்கிறது.
ஆற்றில் நகரத்தை அள்ளும்
படகு மிதக்கிறது.
முதலில் சொற்களின் ஒளி
மீள முடியாத சகதியில் ஒளித்து
வைக்கப்பட்டிருக்க காலம்
தோற்க்கடிக்கப்பட்ட வானம் முழுவதும்
இருள் பொழிகிறது.

சமாதானத்தின் நிழலில்
எரிந்து கருகுகிறது கடதாசி நகரம்.
குழந்தைகள் துப்பாக்கிகளால்
மடக்கிப்பிடிக்கப்பட்டு கவச வாகனங்களில்
நிரப்பப்படுகின்றனர். முன்னால் நிற்கிறது
ஷெல்களை பொழியத் தயாராக இருக்கிற
பீரங்கிகள்.
நம்பிக்கைகளை ஏமாற்றியபடி
எதிர்பார்ப்புக்களை சிதைத்தபடி
சொற்கள் போர் வளர்த்துக்
கொண்டிருக்கின்றன.
காத்திருப்புக்களின்மீது
மிதிக்க வெடிக்கிறது புதிய வெடிகள்.
குழந்தைகள் எல்லாவற்றையும் கண்டு
அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள்.

வாசனையை உணர்ந்த கிழவன்
திண்ணையை மேய்ந்த
பின்மாலைப்பொழுதில்
தோற்கடிக்கப்படுகிறான்.

காலத்தின்மீது நஞ்சுக் கனிகள் காய்த்து
முற்றுகிறது – துவக்குகள்
ஆட்களைத் தேட மரணம் அண்மையை
சுலபப்படுத்துகிறது.

மரம் முழுவதும் பாம்புகள்
பூத்து அடர குளத்தில் விஷம் நிரம்புகிறது.
ஆறுகளின்மீது பெருமெடுப்பில் பாய்கிறது
வீழ்ச்சியின் இலக்கு.

பீரங்கிகள் தயாராக இருக்கின்றன.
டாங்கிகள் புறப்படத் தொடங்குகின்றன.
துவக்குகள் நிமிர்ந்து நேராக நிற்கின்றன.

சொற்களைப் பிய்த்தெறிந்துவிட்டு
குண்டுகளை ஏற்றி வந்து ,றக்குகிறது
பயண விமானங்கள்.
வெள்ளைவீதிளில் சமாதானம்
போரை வடிவமைக்கிறது.
குழந்தைகள் ஒழித்துக்கட்டப்பட்ட
நகரத்தில் அவர்கள் தோற்றதை
அறிவித்துக்கொண்டிருக்கிறது
சமாதானத்தின் கடதாசி.

– *தீபச்செல்வன்*


# தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சி

## நீங்கள் தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சியைப் பெற வேண்டுமா?

கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 3 மணி நேர பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

5 வகுப்புகளில் பயிற்சி பெற்ற பின் நீங்களாகவே ஒரு இணையத் தளத்தை உருவாக்கும் ஆற்றல் பெறுவீர்கள்.

## வகுப்புக்கள் ஆரம்பமாக இருக்கின்றன !

**இடத்திற்கு முந்துங்கள்**

பதிவு செய்வதற்கு

தொலைபேசி: **020 7043 4316**